**சுருக்கம்**

வீட்டுவசதி – தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் – அரசாணை (நிலை) எண்.123, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீகூச.1) துறை, நாள் 5.6.2013ல் 100 விழுக்காடு கடன் தவணைத் தொகையினை நிலுவையின்றி செலுத்திய 72 சங்கங்களுக்கு மட்டும் புதிய கடன்கள் வழங்கப்படும் என்ற நிபந்தனையை தளர்த்தி, முதன்மைச் சங்கங்கள் தாங்கள் வசூல் செய்யும் தொகையில் 50 விழுக்காடு தொகையை அந்தந்த சங்க உறுப்பினர்களுக்கு கடனாக வழங்க அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீகூச 1) துறை**

**அரசாணை (நிலை) எண்.47** | **நாள் 03.03.2014**
**விஜய மாசி 19**
**திருவள்ளுவராண்டு 2045**

**படிக்க:–**

1. அரசாணை (நிலை) எண்.123, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 5.6.2013.
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) கடித ந.க.எண். 4600 / 2008/ ஆ3, நாள் 27.12.2013.

= = = = = =

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 100 விழுக்காடு கடன் தவணைத் தொகையினை நிலுவையின்றி செலுத்திய 72 சங்கங்களுக்கு மட்டும் புதிய கடன்கள் வழங்க ஏதுவாக அரசாணை (ப) எண்.154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 1.9.2009ல் விதிக்கப்பட்டுள்ள தடையாணையை தளர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் இதர விவரங்களுடன், கடந்த நான்கு ஆண்டுகளாக புதிய கடன்கள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டதால் முதன்மைச் சங்கத்தில் கடன் நிலுவைகள் வெகுவாக குறைந்து, சங்கங்கள் லேவாதேவியின்றி நலிவடைந்த நிலைக்கு தள்ளப்பட்டு, நிர்வகிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் இதனால் சங்கத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் சம்பளம் வழங்கப்படாத நிலையில், பணியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் செயல்பட்டு வருகிறது என்றும் மேலும், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் நிலவும் இந்த நிலையினையும், சங்கப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தலைமை நிதிநிறுவனமாக செயல்படுவதால் இதன்

மூலம் முதன்மைச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்தால் மட்டுமே சங்கங்கள் ஸ்திரத்தன்மையுடன் செயல்படக்கூடிய நிலை உருவாகும் எனவும் எனவே, முதன்மைச் சங்கங்கள் எவ்வளவு தொகை கடன் வசூல் செய்கிறதோ அத்தொகையில் 50 விழுக்காடு தொகையை அந்தந்த சங்கங்களுக்கு புதிய கடன்களாக வழங்கினால், வசூல் சதவிகிதம் உயர்வதோடு முதன்மைச் சங்கங்களின் கடன் நிலுவையும் உயர்ந்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களிடமிருந்து உறுப்பினர்கள் வீட்டுவசதித் தேவையினை பூர்த்தி செய்து கொள்ளவும் வழிவகை ஏற்படும் எனவும், மேலும் கடன் வசூலில் 100 விழுக்காடு செலுத்தும் சங்கங்களுக்கு மட்டுமே புதிய கடன்கள் வழங்கப்படும் என்ற நிபந்தனையை தளர்த்தி முதன்மைச் சங்கங்கள் எவ்வளவு தொகைகளை வசூல் செய்கின்றதோ அத்தொகையில் 50 விழுக்காடு தொகையை அந்தந்த சங்கங்களுக்கு புதிய கடனாக வழங்கலாம் என்று உத்தரவு வழங்கும்பட்சத்தில், ஏற்கனவே 50 விழுக்காடு வசூலித்த சங்கங்கள், மேலும் 50 விழுக்காடு அளவிற்கு புதிய கடன்கள் பெறும் நோக்கத்தோடு, தவணை தவறிய தொகைகளை முனைப்புடனும், ஆர்வத்துடனும் வசூல் செய்திட வழிவகுக்கும். இதன்மூலம் 2013–14–ஆம் ஆண்டிற்கு இணையம் பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தவணை தொகைகளை அரசிடமிருந்து எவ்வித நிதியுதவியும் எதிர்பாராமல் செலுத்திட வழிவகை ஏற்படும் என்று மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 100 விழுக்காடு கடன் வசூலிக்கப்பட்ட சங்கங்களுக்கு மட்டுமே புதிய கடன்கள் வழங்கப்படும் நிலையில், குறிப்பிட்ட சங்கங்களை தவிர்த்து ஏனைய தவணை தவறிய சங்கங்கள் புதிய கடன் பெற வாய்ப்பில்லாததால், சங்க பணியாளர்கள் வசூல் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடாததால், வசூலில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை. இதனால், இணையம் பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கேட்புத் தொகைகளை உரிய காலத்தில் செலுத்த இயலாமல் அரசிடமிருந்து நிதியுதவி கோரும் நிலை உருவாகியுள்ளது என்றும், இணையம் பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு குறித்த காலத்தில் செலுத்த வேண்டிய தவணைத் தொகைகளை திருப்பி செலுத்த இயலாத நிலை ஏற்பட்டால், பல்வேறு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் இணையத்திற்கு கடன் வழங்க முன்வராத நிலை உருவாகும் என்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இணையம் 30.11.2013 முடிய தவணை தவறிய அசல் ரூ.661.82 கோடி, தவணை தவறிய வட்டி ரூ.640.16 கோடி மற்றும் அபராத வட்டி ரூ.564.92 கோடி ஆக மொத்தம் ரூ.1866.90 கோடி அளவிற்கு முதன்மைச் சங்கங்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டியுள்ள தாகவும், தவணை தவறிய தொகையினை அரசு தற்போது அறிவிக்கப்படவுள்ள தள்ளுபடி திட்டத்தில் முதன்மைச் சங்கங்கள் வசூல் செய்யும் தொகையில் 50 விழுக்காடு தொகையை உடன் கடனாக வழங்கினால் மட்டுமே முதன்மைச் சங்கங்களில் நிலவும் பிரச்சனைகளுக்கும் மற்றும் இணையத்தில் நிலவும் பிரச்சனைகளுக்கும் நிரந்தர தீர்வு ஏற்பட வாய்ப்புகள் உருவாகும் என்றும், முதன்மைச் சங்கங்களில் புதியதாக பொறுப்பேற்றுள்ள நிர்வாகக் குழுவிடம் உறுப்பினர்கள் தங்களது வீட்டுவசதி தேவைகளை பூர்த்தி செய்வதற்கு கடன்கள் கோரியுள்ள நிலையில் இந்நடவடிக்கை மூலம் புதிய கடன்கள் வழங்க வழிவகை ஏற்படும் என்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் கோரிக்கையினை ஏற்று, அரசாணை (நிலை) எண்.123, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பற வளர்ச்சித் (வீகூச–1) துறை, நாள் 05.06.2013ல் 100 விழுக்காடு தவணை செலுத்தும் முதன்மைச் சங்கங்களுக்கு புதிய கடன்கள் வழங்கப்படும் என்ற நிபந்தனையை தளர்த்தி, அனைத்து முதன்மைச் சங்கங்களும் எவ்வளவு தொகை கடன் வசூல் செய்து செலுத்துகின்றனவோ, அத்தொகையில், 50 விழுக்காடு தொகையை அந்தந்த சங்கங்களுக்கு புதிய கடன்களாக வழங்குவதற்கு ஏற்ப தக்க ஆணை வழங்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி 1ல் காணும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் செயற்குறிப்பை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப் பின், அரசாணை (நிலை) எண்.123, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(வீகூச1) துறை, நாள் 5.6.2013ல் 100 விழுக்காடு தவணை செலுத்தும் முதன்மைச் சங்கங்களுக்கு புதிய கடன்கள் வழங்கப்படும் என்ற நிபந்தனையை தளர்த்தி, அனைத்து முதன்மைச் சங்கங்களும் எவ்வளவு தொகை கடன் வசூல் செய்து செலுத்துகின்றனவோ அத்தொகையில் 50 விழுக்காடு தொகையை அந்தந்த சங்கங்களுக்கு புதிய கடன்களாக வழங்குவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. இந்த அரசாணை நிதித்(வீட்டுவசதி) துறையின் அ.சா.கு.எண். 9948/Fin(Hg)/JS(AR)/14 நாள் 03.03.2014 ன் இசைவுடன் வெளியிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தங்க கலியபெருமாள்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) ,
சென்னை–35
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்,
சென்னை–7.
நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித் (வீட்டுவசதி) துறை, சென்னை–9
அரசு செயலாளரின் தனிச் செயலர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை–9
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (அநமு1) துறை,
சென்னை–9
இகோ / உதிரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**